**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**<u>30.06.2026</u>**

OS. No. 19/2010

பக்கம் –

PW1 – மங்கையர்கரசி

**<u>3 முதல் 5 பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முனுசாமி முதலியாரின் சொத்து என்பதை காட்ட என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு படிப்பறிவு இல்லததால் தெரியாது. இந்த வழக்கு விவரம் ஆங்கிலத்தில் உள்ளது என்றும் அதனால் எனக்கு இந்த வழக்கு விவரம் தெரியாது என்றால் எனது மகனை வைத்து தான் விவரத்தை சொன்னோம். நான் ஐயப்பன்தாங்கல் திருமணம் முடித்து சென்றேன். ஐயப்பன்தாங்கலுக்கும் நிலம் உள்ள இடத்திற்கு எவ்வளவு தூரம் என்றால் நடக்கும் தூரம் தான். தந்தையார் இறந்தவுடன் அந்த இடத்தை சென்று பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. கழனியில் கட்டிடம் இருந்தது என்றால் சரிதான். யார் கட்டிடம் கட்டினார்கள் நான் விசாரித்தேனா என்றால் இல்லை. 1984ல் இருந்து வழக்கு தாக்கல் செய்யும் வரை நான் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததிற்கு என்ன ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. எனது தந்தை நீலகண்ட முதலியார் நோய்வாய் பட்டு இருந்தார் என்றால் சரிதான். என்ன நோய் என்றால் காய்ச்சல் ஒரு வாரம் இருந்தது வேறு ஒன்றும் இல்லை. 1980ல் எனது அக்கா கணவர் தர்மலிங்கத்திற்கு எனது அப்பா செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த விவரம் தெரியமா என்றால் தெரியாது. தற்போது தான் 2 ஆண்டுக்கு முன்பு தான் தெரிய வந்தது. 1984 ல் எனது அப்பா இறந்ததிலிருந்து இந்த வழக்கு தாக்கல் வரை தாவா சொத்து எவ்வாறு இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் விவசாய நிலமாக இருந்தது. விவசாய நிலத்தில் யார் பயர் செய்து வந்தார்கள் என்றால் எனது அக்கா கணவர் தர்மலிங்கம்(D2). எனது அப்பா நிலம் எனக்கு அதில் பாகம்

கொடு என்று நான் எனது அக்கா கணவர் தர்மலிங்கத்திடம் நான் பாகம் கேட்டேனா என்றால் நான் கேட்டேன். 2005ல் எனது தாயார் இறக்கும் வரை இந்த பாகம் குறித்து நான் கேட்டேனா என்றால் ஒரு முறை கேட்டேன். எந்த ஆண்டு கேட்டேன் என்றால் தெரியாது. எனக்கு 2 மகன்கள் பெரிய மகனுக்கு 35 வயது, இளைய மகனுக்கு 30 வயது. தாவா சொத்தை எனது அப்பா எனது அக்கா கணவர் தர்மலிங்கத்திற்கு செட்டில் செண்ட் எழுதி வைத்த விவரம் எனது மகன்களுக்கு எவ்வாறு தெரியும் என்றால் நான் தான் கூறினேன். கிரைய பத்திரம் மற்றும் செட்டில்மெண்ட் எனது மகன்கள் படித்து பார்த்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தர்மலிங்கம் சொத்தை அவரது மகளுக்கு (D6) எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துகளின் வருவாய் ஆவணங்களின் விவரத்தை கிராம நிர்வாக அலுவலரிடம் நான் விசாரித்தேனா என்றால் இல்லை. தாவா நிலங்களின் விளைச்சலின் பங்கை நான் கேட்டேனா என்றால் கேட்டேன். எந்த வருடம் என்று எனக்கு தெரியவில்லை. இந்த பங்கு விகிதாசாரம் குறித்து எனது மகன்கள் வளர்ந்த காலத்தில் அதாவது சுமார் 10 வயது இருக்கும் காலத்தில் தான் கேட்டேன். எனது மகன்களுக்கு 10 வயதிற்குள் விளைச்சலில் பாகம் கேட்டு அதன் பிறகு சுமார் 15 ஆண்டுகள் கழித்து இந்த தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். காரணம் நான் பாகம் கேட்டேன் அவர்கள் கொடுக்கவில்லை அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். தாவா சொத்தில் கட்டிடம் கட்டி போர் போட்டு ஆயித்த கதவுகள் செய்யும் நிறுவனம் சுமார் 20 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது என்றால் எனக்கு தெரியாது. அந்த நிறுவனத்தில் தீ விபத்து நடந்தது என்றும் அந்த நீ விபத்தின் காரணமாக நிறுவனம் மூடப்பட்டது என்பது தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு வரி ரசீது யார் செலுத்தி வந்தார்

என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் போர் போடும் தொழில் செய்து வருகிறார். தாவா சொத்தின் அசல் பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் எனது அம்மா இருக்கும் வரை நான் பார்த்ததுஇல்லை. என் தயார் உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்து எங்கு எங்கு உள்ளது என்று என்னிடம் கூறியுள்ளாரா என்றால் இல்லை. தாவா சொத்திற்கான சிட்டா அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குத்தகை பயிரா சொந்த பயிரா என்றால் சொந்த பயிர். யார் பயிர் செய்தது என்றால் எனது அக்கா கணவர் தர்மலிங்கம். நான் சொல்லி உள்ள விவரங்கள் எல்லாம் ஆவண பூர்வமாக உள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது தாய் தந்தையார் சொத்தை எல்லாம் விற்று அவர்களே செலவு செய்துவிட்டார்கள் என்றும் அதனால் எனக்கு பாகமே இல்லை என்றால் சரியல்ல. எனது தாயார் 2005 ஜூலையில் காலமானர் என்றால் அது குறித்து தெரியாது. வா.சா.ஆ.13 என்னுடைய தாயாரின் இறப்பு சான்றிதழ் என்றால் நான் அந்த ஆவணத்தில் எந்த கையெழுத்தும் செய்யவில்லை. எனக்கு கையெழுத்து போடத் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு நடத்துவதற்கும் என்னுடன் தொடர்ச்சி என் மகன்கள் நீதிமன்றத்திற்கு வருவார்கள் என்றால் வருவார்கள்.

Sd/– J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.